18-06-2014 Dinamalar




**பணிகள் விறு...விறு...** | சென்னை வடபழனி சந்திப்பில், மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கும் பணி வேகமாக நடந்து வருகிறது.

# மெட்ரோ ரயில் வழித்தடத்தில் அலங்கரிக்கும் 'ஆர்ச்' அமைப்பு

**சென்னை, ஜூன் 18–**

கோயம்பேடு – ஆலந்தூர் மெட்ரோ ரயில் வழித்தடத்தில், மேற்கூரை அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

சென்னையில், வண்ணாரப்பேட்டை – சென்னை விமான நிலையம் மற்றும் சென்ட்ரல் – பரங்கிமலை என, இரு வழித்தடங்களில், மெட்ரோ ரயில் திட்டப் பணி நடக்கிறது.

இரண்டாவது வழித்தடமான, சென்ட்ரல் – பரங்கிமலை வழித்தடத்தில், இந்த ஆண்டுக்குள், மெட்ரோ ரயில் போக்குவரத்தை துவங்க ஏதுவாக, பணி துரிதப்படுத்தப்பட்டு உள்ளது.

எனவே, தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இருந்த ரயில் நிலைய பணி, கடந்த சில வாரங்களாக, மீண்டும் துவங்கி உள்ளன. இதற்காக, மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம், அவ்வப்போது நடக்கிறது.

இதற்கிடையே, ரயில் நிலையங்கள் சந்திப்பில் உள்ள, மெட்ரோ ரயில் வழித்தடத்தில், மேற்கூரை அமைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. கோயம்பேடு, கோயம்பேடு பேருந்து நிலையம் ஆகியவற்றில், மேற்கூரை அமைக்கும் பணி முடிந்துள்ளது.

அரும்பாக்கம், வடபழனி, அசோக் நகர் உள்ளிட்ட ரயில் நிலைய சந்திப்புகளில், மேற்கூரை அமைக்கும் பணி முழுவீச்சில் நடக்கிறது.

இதுகுறித்து, மெட்ரோ ரயில் திட்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஆர்ச் மேற்கூரைக்காக, இரும்பிலான பைப் வெல்டிங் மூலம், ரெடிமேடாக தயார் செய்யப்படுகிறது. அவற்றை ஒன்றுக் கொன்று இணைத்து, மேற்கூரை உருவாக்கும் பணி நடக்கிறது' என்றார்.